[2003 மே 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 409, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

409—

விற்பனை வரி விலக்கு

***19723—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 2(n)-ன்கீழ் உள்ள விளக்கம் I-ன்படி, கூட்டுறவுச் சங்கமும் ஒரு வணிகராகக் கருதப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைகளுக்கு பொதுவான வரி விலக்கு அளிக்க இயலாது. தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் வரி விலக்கிற்கு விண்ணப்பிக்கும்போது, அக்கோரிக்கையின் தன்மை மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

திரு. சோ. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான வரி விலக்கு அளிக்கப்படாது என்ற பதிலை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் விண்ணப்பிக்கும்போது, அதற்கான வரி விலக்கு பரிசீலனை செய்யப்படும் என்ற ஒரு அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், அந்த பால் உற்பத்தியோடு இணைந்து அந்தத் தொழில், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களிலே பால் கொள்முதல் செய்தது போக, அதிகமாக உள்ள பால் உற்பத்தி என்ற அடிப்படையிலே அதனோடு இணைந்த

2003 மே 8]

தொழிலான அந்தக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் ஒரு தேநீர் விடுதியோ அல்லது மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பாலிலே பால்கோவா தயாரிப்பு போன்ற இந்த உப தொழில்களுக்கு வணிக வரியாக கிட்டத்தட்ட பால் கோவா தயாரிப்பதற்கு 12 சதவீதம் என்ற அடிப்படையிலேயும், தேநீர் விடுதிகளுக்கு 8 சதவீதம் என்ற அடிப்படையிலேயும் வரி விதிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக sur-charge என்ற அடிப்படையிலே 5 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், அந்த வரி விதிப்பை கட்டத் தவறும்பட்சத்தில் அதற்கு penalty-யாக வேறு 150 சதம் அளவுக்கு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இராசேந்திரன், என்ன கேள்வி என்பதைச் சொல்லுங்கள்.

திரு. சோ. இராசேந்திரன்: வரி வசூலிக்கப்படுகிறது. ஆகையால் எனது தொகுதிக்கு உட்பட்ட எட்டையபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திலே இதுமாதிரி வரி விதிப்பதன் மூலமாக அந்தச் சங்கம்-மேன்மேலும் இலாபகரமாக செயல்படுகின்ற அந்தச் சங்கம்-வரி விதிப்புக்கு உட்பட்டு பாதிப்புக்கு உள்ளாகின்றது என்ற அடிப்படையிலே அந்தச் சங்கத்தின் மூலமாக பல்வேறு தடவைகள் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே அதைப் பரிசீலித்து ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்துடன் இணைக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு மாதங்கள் வரை பால் கெடாமல் இருக்கும் வண்ணம் Tetra Pack-ல் அடைத்து வைக்கப்படும் பாலுக்கு 28-8-2001 முதல் வரி விலக்கு அளித்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு ஆணையிட்டுள்ளது. இதேபோன்று மேற்கூறிய மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதன் தன்மைகளை ஆய்ந்து அதனுடைய தேவைகளைக் கருத்தில்கொண்டு அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.